**எடுத்துக்காட்டு 8.3** கீழ்க்காணும் பரவலிற்கு, படிவிலக்க முறையில், சராசரியைக் காண்க.

| பிரிவு இடைவெளி | 0-8 | 8-16 | 16-24 | 24-32 | 32-40 | 40-48 |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண் $(f)$ | 10 | 20 | 14 | 16 | 18 | 22 |

**தீர்வு:**

ஊகச் சராசரி $A = 28$, பிரிவு நீளம் $c = 8$

| பிரிவு இடைவெளி | மையப்புள்ளி $x$ | நிகழ்வெண் $f$ | $d = \dfrac{x-A}{c}$ | $fd$ |
|---|---|---|---|---|
| 0-8 | 4 | 10 | –3 | –30 |
| 8-16 | 12 | 20 | –2 | –40 |
| 16-24 | 20 | 14 | –1 | –14 |
| 24-32 | 28 | 16 | 0 | 0 |
| 32-40 | 36 | 18 | 1 | 18 |
| 40-48 | 44 | 22 | 2 | 44 |
| | | $\sum f = 100$ | | $\sum fd = -22$ |

சராசரி $\bar{X} = A + \dfrac{\sum fd}{\sum f} \times c$

$= 28 + \left(\dfrac{-22}{100}\right) \times 8$

$= 28 - 1.76 = 26.24$

**குறிப்பு**

- $x_i$ மற்றும் $f_i$ –ன் மதிப்பு சிறியதாக இருக்கும் போது நேரடி முறையே சிறந்தது.
- $x_i$ மற்றும் $f_i$ –ன் மதிப்பு பெரியதாக இருக்கும் போது ஊகச் சராசரி அல்லது படிவிலக்க முறையைப் பயன்படுத்தலாம்
- பிரிவு இடைவெளிகள் சமமில்லாமல் இருக்கும் போதும், அது எண் மதிப்பில் பெரியதாக இருக்கும் போதும் படிவிலக்க முறையைப் பயன்படுத்தலாம்.

### 8.4.4 கூட்டுச்சராசரியின் சிறப்புப் பண்பு (A special property of the Arithmetic Mean)

1. சராசரியிலிருந்து, அனைத்து உறுப்புகளின் விலக்கங்களின் கூடுதல் பூச்சியம் ஆகும்.

   $x_1, x_2, x_3, \ldots, x_n$ என்ற $n$ புள்ளிவிவரங்களின் கூட்டுச்சராசரி $\bar{X}$ எனில்

   $\left(x_1 - \bar{X}\right) + \left(x_2 - \bar{X}\right) + \left(x_3 - \bar{X}\right) + \ldots + \left(x_n - \bar{X}\right) = 0$ . எனவே $\sum_{i=1}^{n} (x_i - \bar{X}) = 0$

2. தரவிலுள்ள ஒவ்வொரு உறுப்புடனும் ஒரு மாறா மதிப்பு $k$ ஐ கூட்டினாலோ அல்லது கழித்தாலோ முறையே அதன் சராசரியும் மாறா மதிப்பு $k$ அளவு கூடும் அல்லது குறையும்.

3. தரவிலுள்ள ஒவ்வொரு உறுப்புடனும் ஒரு மாறா மதிப்பு $k$, $k \neq 0$ ஆல் பெருக்கினாலோ அல்லது வகுத்தாலோ முறையே அதன் சராசரியும் மாறா மதிப்பு $k$ ஆல் பெருக்கப்படும் அல்லது வகுக்கப்படும்.



8-Stats TM.indd 291 02/12/2022 21:17:17